1972 நவம்பர் 13]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) தீவுத் திடலில் கட்டிடம் கட்டும் பணி நிறுத்தி வைக்கப் பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதென்று மத்திய பாதுகாப்பு அமைச்சர் தனது கடிதத்தில் அறிவித்துள்ளார். பாதுகாப்புத் துறையின் தேவைகளை நிறைவு செய்வதற்காக தகுந்த மாற்று நிலத்தை மாநில அரசின் ஒத்துழைப்புடன் தெரிந்தெடுக்கும்படி மத்திய அரசு இராணுவத் தலைமையிடத்தைக் கேட்டுக் கொண் டுள்ளது. அதற்கு இணங்க மத்திய அரசு அதிகாரிகளும், பாது காப்புத்துறை அதிகாரிகளும் அண்மையில் இது குறித்து என் னுடன் கலந்து பேசினர். தற்போது வேறு மாற்று இடம் கொடுப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

Special Pay for Tamil Pandits

*268 *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any Second Grade Tamil Pandit serving in the Madurai Municipal High Schools has been asked to refund the special pay of Rs. 10 per month paid since 1965; and

(*b*) if so, the reasons therefor?

தமிழாசிரியர்களுக்குச் சிறப்புச் சம்பளம்

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர் வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலைத் தர தமிழ் ஆசிரியர்கள் யாரேனும், 1965-ம் ஆண்டி லிருந்து மாதந்தோறும் அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு சம்பளமான ரூ. 10-ஐ திருப்பிச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனரா ?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பயிற்சி பெற்ற, மற்றும் பயிற்சி பெறாத இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கு மேல் படிவங்களில் வகுப்பு நடத்துவதற்கு வழங்கப்படும் தனி சம்பளமாகிய ரூ. 10, 1960-க்குப்பின் நியமிக்கப்பட்ட இரண்டாம்

நிலை பயிற்சி பெருத தமிழ் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுவதில்லை. தணிக்கைத் துறை மதுரை நகராட்சியில் 1965-ம் ஆண்டு நியமிக்கப்பட்ட இரண்டாம் நிலை தமிழாசிரியர் ஒருவருக்கு தனிச் சம்பளம் கொடுக்கப்பட்டதை ஆட்சேபித்தது. ஆனால், அத் தமிழாசிரியர் பயிற்சி பெற்றவராக இருந்தமையால் பிடிக்கப்பட்ட தனிச் சம்பளத்தை திருப்பி அளிக்குமாறு ஆணையிடப்பட்டு விட்டது.

Excavation work at Pallaveneswaram site at Kaveripumpattinam.

*269 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the excavation work at Pallavaneswaram site at Kaveripumpattinam could not be proceeded with, consequent on non-allotment of alternate sites to the residents of that area by the R.D.O., Mayuram; and

(b) if so, the reasons therefor ?

காவிரிப்பூம்பட்டினம், பல்லவனேஸ்வரத்தில் அகழ்தல் பணி

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) காவிரிப்பூம்பட்டினம், பல்லவனேஸ்வரத்தில் அகழ்தல் பணிக்கென தெரிந்தெடுக்கப்பட்ட பகுதியில் வசிப்பவர்களுக்கு மாயூரம் வருவாய்க் கோட்ட அதிகாரி மாற்று மனைகளை ஒதுக்காததன் விளைவாக, பல்லவனேஸ்வரம் பகுதியில் அகழ்தல் பணியை நிறைவேற்ற முடியவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சா. கணேசன் : காவிரிப்பூம்பட்டினத்தில் பல்லவனேஸ்வரம் என்ற பகுதி இருக்கிறது. பல்லவர் கால கோவில் இருப்பதால், பல்லவனேஸ்வரம். அங்கு அகழ்வாராய்ச்சி நடைபெறுவது நம்முடைய அகழ்வாராய்ச்சித் துறையினரால்